**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 06.08.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது

**1. மேற்குமண்டலம்**

வரும் நாட்களில் மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் கன மழையும் மற்ற பகுதிகளில் மிதமான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 16-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழையுடன் மணிக்கு 10-26 கிமீ வரை காற்றும் எதிர்ப்பார்க்கப்படுவதால் தகுந்த வடிகால் வசதி செய்யவும். கனமழை எதிர்ப்பார்க்கப்படுவதால் பூச்சிமருந்து மற்றும் மற்ற வேலைகளை ஒத்தி போடவும். மழை எதிர்ப்பார்க்கப்படுவதால் நடவு செய்வதை ஒத்தி வைக்கவும்.
- மழையை பொறுத்து பருத்தி விதைப்பதை தீர்மானிக்கலாம்.
- அதிக மேக மூட்டம் காணப்படுவதனால் மண்வழியாக உரமிடலைத் தவிர்க்கவும்.
- அதிக காற்றின் வேகத்தினால் மருந்து துளிகள் ஏனைய பயிர்களில் பாதிப்பதனை தவிர்க்க காற்றில்லா சமயங்களில் தெளிக்கவும்.
- குறுகிய கால நெல் நடவினைத் தொடரவும். நெல்லில் தண்டு துளைப்பான் தாக்கம் தென்படின் குளோரான்டிரினில்ப்ரோல் 18.50% SC என்ற மருந்தை 150 மில்லி / ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- குலைநோய் அறிகுறி தென்படின் டெபுகோனசோல் 50 % + டிரைபிளாக்ஸிஸ்ட்ரோபின் 25% WG குருனையை ஹெக்டருக்கு 200 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- கனமழை எதிர்ப்பார்க்கப்படுவதால் மக்காச்சோளம் விதைப்பதை தள்ளி போடவும். மக்காசோளத்தில் அமெரிக்கன் படைப்புழு தாக்கம் தென்படின் புளுபென்டமைடு 20% WG என்ற மருந்தை 250 கிராம் / ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி பருத்தி விதைப்பிற்கான நிலம் தயாரித்து விதைப்பினை வரும் ஆகஸ்டு 15ம் தேதிக்குள் முடிக்கவும்.
- மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கொடுக்கவும். மழை எதிர்பார்க்கப்படுவதால் கிடைக்கும் மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும்.

- நிலவும் வானிலை கொடிவகை காய்கறிகளில் பச்சை தத்துப்பூச்சியை அதிகப்படுத்தும். இதை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மி.லி இமிடாகுளோபிரிட் 70% WG @ 35 கிராம் / ஹெக்டர் என்ற மருந்தை தெளிக்கவும்.
- அதிவேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதனால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். வாழையில் வாடல் நோயினை கட்டுபடுத்த டிரைக்கோடெர்மா விரிடியை 2.5 கிலோவை 250 கிலோ எருவுடன் கலந்து விடவும்.
- வால்பாறை பகுதிகளில் தேயிலை தோட்டங்களிலுள்ள மரங்களுக்கு கவாத்து செய்ய அறிவுருத்தப்படுகிறது. தேயிலையில் பிளிஸ்டர் கருகல் நோய் தென்படின் ஹெக்சகோனசோல் 5% EC @ 200 மில்லி / ஹெக்டர் என்ற அளவில் 70-90 லிட்டர் தண்ணீருடன் கலந்து விசைதெளிப்பான் மூலம் கலந்து தெளிக்கவும்.
- தற்போது நிலவும் வானிலை காரணமாக கறவை மாடுகளில் மடிவீக்க நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் 1 சதம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கலவையில் கழுவ வேண்டும் தற்போது நிலவும் அதிக ஈரப்பதம் மற்றும் வேகமான காற்று கால்நடைகளுக்கு இறுக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தும். இதைக் குறைக்க அடிக்கடி குளிர்ந்த தண்ணீரை உடலின் மேல் ஊற்றவும். மேலும் கூடாரங்களில் காற்று வரும் திசையில் சாக்கு பையை தொங்கு விடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 06.08.2025, 07.08.2025, 08.08.2025 ஆகிய தினங்களுக்கு இலேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 - 37°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 28°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14 - 26 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் மேற்கு-தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI).
- குறுவை நெற்பயிரில் கதிர் தோன்றும் பருவத்தில் 1 ஏக்கருக்கு 35 கிலோ யூரியாவையும் 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். குறுவை நெற்பயிரில் 40 ம் நாள் கைக்களை எடுக்கவும்.
- வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.
- வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்கி 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

**3. தெற்குமண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 06.08.2025, 08.08.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32-38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-26°செ

ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70- 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 18-24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு – தென்மேற்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- மானாவாரி மற்றும் பாசனப்பயிர்களுக்கு காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் அதிகாலையில் தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- நெல்லில் நாற்றங்கால் மற்றும் பயிர் வளர்ச்சிப் பருவத்தில் பாசனம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மூட்டமான வானிலை நிலவுவதால் பயிர்களை தொடர்ந்து கண்காணிக்கவும், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
- மக்காச்சோளத்தில் அதிகமான காற்றினால் பயிர் சேதமடையலாம், ஆதலால் விவசாயிகள் பயிர் சேதமடைவதை தடுக்க பயிருக்கு மண் அணைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். போதுமான நீர்ப்பாசனம் மற்றும் சரியான ஊட்டச்சத்து மேலாண்மை ஆரோக்கியமான பயிர் வளர்ச்சியை உறுதி செய்கிறது. இதனால் காற்றின் எதிர்ப்பை பயிர் மேற்கொள்ள முடியும்.
- வாழைக்கு விவசாயிகள் மண்அனைத்தல் மற்றும் முட்டுக்கொடுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாழையை சுற்றிலும் கிழக்கு-மேற்கு திசையில் அகத்தி போன்ற காற்று தடுப்பு மரங்களை வளர்க்கவும். இதனால் அதிக காற்று மழையினால் வாழை சேதமடைவதை தவிர்க்கலாம்.
- காற்றில் கரும்பு சாயாமல் இருக்க மண் அணைத்தல் மற்றும் வட்டம் கட்டுதல் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 28-38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-29°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 06-24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று மேற்கு, வட மேற்கு, தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

**நெல்**

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழுக்களின் தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. இதன் அறிகுறிகள், இலைகள் ஊதுகுழல் போல் சுருண்டு அதனுள் புழுக்கள் இருந்து கொண்டு இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிட்டு கழிவுகளை வெளியிடும். இதனால் இலைகள் வெள்ளை நிறத்தில் மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின் போது ஒட்டுமொத்த வயலும் எரிந்தது போல காணப்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டையை முறையே நடவு செய்ததிலிருந்து 37, 44, 51வது நாட்களில் கட்ட வேண்டும். பயிருக்கு அதிகப்படியான யூரியா உரம் இடுவதை தவிர்த்திடுங்கள். ஏக்கருக்கு ஒன்று என்ற அளவில் விளக்குபொறி வைக்கவும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் வேப்பங்கொட்டை கரைசல் அல்லது 5 மில்லி குலோரிபைரிபாஸ் 20 சதவீத மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**பருத்தி**

பருத்தி சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள், நடவிற்கு முன்பாக பருத்தி விதைகளை கொண்டு விதை முலாம் தயாரிப்பது நல்ல பயனை அளிக்கும். ஒரு கிலோ விதைக்கு 100 கிராம் அரப்பு இலை,

40 கிராம் டி.ஏ.பி, 15 கிராம் நுண்ணூட்டக் கலவை, 200 கிராம் அசோஸ்பைரில்லம் எடுத்து 500 மில்லி மைதா பசையுடன் கலந்து விதை மூலாம் தயார் செய்வதன் மூலம் முளைப்புத்திறன் மற்றும் செடியின் வீரியத்தைக் கூட்டலாம். விதைகளை 3 செ.மீ ஆழத்தில் குழிகளில் ஊன்ற வேண்டும்.

**உளுந்து**

உளுந்து பயிரில் இலைவழி நுண்ணூட்டம் தெளிப்பது நல்ல பலன் கிடைக்கும். இலை வழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் 40 மில்லி கிராம் என்ஏஏ மற்றும் 100 மில்லிகிராம் சாலிசெலிக் அமிலம் கலந்து பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும். நெல் தரிசு பயறு வகைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டிஏபி, பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும். மானாவாரி மற்றும் இறவை பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டிஏபி அல்லது 20 கிராம் யூரியா கலந்து பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

**கத்திரி**

கத்திரி பயிரில் கண்ணாடி இறக்கைப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகைப் பூச்சியின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாய் மாறி விடும். சேதமடைந்த இலைகளில் பூச்சியின் உரித்ததோல் மற்றும் கழிவுகளால் மூடியிருப்பதைக் காண முடியும். இதனைக் கட்டுப்படுத்த, **10**லிட்டர் தண்ணீருக்கு **40**மில்லி வேப்ப எண்ணெய் மற்றும் **40** கிராம் சூடோமோனஸ் உடன் **20** மில்லி கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை கலந்து தெளிக்க வேண்டும்.

**வாழை**

வாழையில் மகசூலை அதிகரிக்க லிட்டருக்கு 20 கிராம் என்ற அளவில் வாழை பூஸ்டர் (பனானா சக்தி) உடன் எலுமிச்சை சாறு கலந்து வாழை நடவு செய்த 3, 5 மற்றும் 7ம் மாதங்களில் இலை வழி தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

**தென்னை**

அடுத்த சில நாட்களுக்கு அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னையில் காய்ந்த மற்றும் முதிர்ந்த காய்களை பறித்துவிடவும் பழைய காய்ந்த மட்டைகளை அகற்றி விடவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும்.

**பப்பாளி, முருங்க்கை**

மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் ஆகஸ்ட் **6** மற்றும் **7** தேதி, மணிக்கு **30** முதல் **40** கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**மல்லிகை**

மல்லிகைப் பூப் பயிரில் மொட்டுப் பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் ஆரம்பநிலையில் பாதிக்கப்பட்ட மொட்டானது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். மொட்டுக்கள் பெரிதாகாமல், சிறுத்து, காபி நிறத்தில் மாறி பின் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு உடன் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கொய்யா**

மாவு பூச்சிகள் (Mealy bugs) என்பது கொய்யா மரங்களை தாக்கும் ஒரு வகையான பூச்சிகள். இவை தாவரங்களில் இருந்து சாறை உறிஞ்சி வாழ்கின்றன. குறிப்பாக ஈரப்பதம் மற்றும் வெப்பமான பகுதிகளில் இவை அதிகம் காணப்படும். மாவுப் பூச்சிகள் கொய்யா மரங்களின் இலைகள், தண்டுகள் மற்றும் பழங்களில் படிந்து, அவற்றை சேதப்படுத்தும். கொய்யா மரங்களில் மாவு பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 5 மில்லி வேப்ப எண்ணெய் மற்றும் 5 மில்லி பாத்திரம் கழுவும் திரவத்தை கலந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் தெளிக்கவும். பூச்சிகள் மீண்டும் வருவதைத் தடுக்க, அவ்வப்போது தொடர் இடைவேளையில் இந்த வேப்பஎண்ணெய் கரைசலை தெளிக்கவும். மேலும், பாதிக்கப்பட்ட இலைகள், கிளைகள், மற்றும் பழங்களை அகற்றி அழிக்க வேண்டும்.

**கால்நடை**

இடி மின்னல் தாக்குதலிலிருந்து இருந்து கால்நடைகளை பாதுகாக்க விவசாயிகள் கால்நடைகளை மழை கருக்கல் வரும் நேரங்களில் மேய்ச்சலுக்கு அனுப்பகூடாது. மேலும் மந்தையாக மேயும் வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளை மின்னல் தாக்கும் வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை முள் கம்பி வேலியில் அல்லது மரங்களின் அருகில் கட்டுவதை தவிர்க்க வேண்டும். கால்நடை கொட்டைகளுக்கு அருகில் இருக்கும் மரங்களை வேரோடு சாய்ந்து கொட்டகையின் மேல் விழுவதை தவிர்க்க மரக்கிளைகளை கவாத்துத் செய்யவும். மேலும் தூங்குமூஞ்சி வாகை வாதநாராணயனண் போன்ற மரங்கள் அதி வேக காற்றின் போது வேரோடு சாய்ந்து விழ வாய்ப்புக்கள் அதிகம். மலைப்பாங்கான குன்று மற்றும் மேடு பள்ளமான பகுதிகளில் மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும். மரக்கம்பங்கள் கூடிய மின் வேலிகள் புதைக்கப்பட்ட ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பரிசோதனை செய்ய வேண்டும். இடியுடன் மின்னல் வரும் மழை காலங்களுக்கு முன்பே அத்தகைய வேலிகளை சரி செய்ய வேண்டும்.

## 4. மலைப்பிரதேசமண்டலம்

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை முதல் இலேசான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 17-20°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 10-13°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-08 கி.மீ அளவுக்கு தென்மேற்கு திசையில் வீ சக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- போதிய வடிகால் வசதி வழங்குதல். உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற உழவியல் / பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.
- பூண்டு பயிரில் ஃபுசேரியம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, கார்பென்டசிம் @ 1கிராம்/லிஅல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லிஎன்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் மண்ணில் ஊற்ற வேண்டும்.
- உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி, மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லாம் , அல்லது பேசிலஸ்சப்டிலிஸ் @ 25 கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு 500 கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- வாழை i) 5 மாத வயதுள்ள மரங்களுக்கு மரக் கம்பங்களைப் பயன்படுத்தி ஆதரவு அளிக்கவும். ii) வடிகால் வசதி செய்து, உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும். iii) அழுகும் மற்றும் அழுகிய இலைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்
- கால்நடைகள் i) மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். ii) விலங்குகளை வெளியில் மேயஅனுமதிக்காதீர்கள். iii) மின் கம்பங்கள் மற்றும் மரங்களுக்கு அடியில் கால்நடைகளை கட்ட வேண்டாம். iv) உள்ளூர் கால்நடை மருத்துவருடன் கலந்தாலோசித்து, உங்கள் கால்நடைகளுக்கு பருவ கால நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுங்கள்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் சில இடங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 - 35$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25$^{o}$செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-16 கி.மீ அளவுக்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- சின்ன வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் தற்போது மழை பெய்து வருவதால், குமிழ் அழுகல் நோய் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலஸ் என்ற உயிர் பூஞ்சாணக்கொல்லியை விதைப்பதற்கு முன்பு கிலோவிற்கு 20 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். மேலும் காப்பர் ஆக்ஸி குளோரைடு என்ற பூஞ்சாணக்கொல்லியை ஏக்கருக்கு 1 கிலோ வீதம் மண்ணில் கரைத்து விட வேண்டும்.
- வயலில் களையை கட்டுபடுத்தி, அங்கக கரிமத்தின் அளவை அதிகரிக்க, தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி, பாக்கு, தென்னை மற்றும் மா போன்ற தோப்புகளில் ஏக்கருக்கு 20 கிலோ நவதானியத்தை விதைத்து 30 முதல் 45 நாட்களில் அவ்வயலிலேயே மறுக்கி விடவேண்டும்.
- மானாவாரி பயிர் செய்யும் விவசாயிகள் பருத்தி, நிலக்கடலை, எள் மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களை பயிரிடுவதற்காக நிலத்தை தயார் செய்து வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் ஏக்கருக்கு 5 டன் மட்கு தொழு உரத்தை கடைசி உழவிற்கு முன் அடியுரமாக இட வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடைகளைத் தாக்கும் புற ஒட்டுண்ணிகளில் உண்ணித்தாக்கம் பண்ணையாளர்களுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். பொதுவாக, உண்ணித்தாக்கம் மழைக்காலங்களில் அதிகமாக காணப்படும். உண்ணிகள் கால்நடைகளை கடித்து இரத்தம் உறிஞ்சுவதால் (0.5 - 2 மி.லி) இரத்த சோகை ஏற்படுத்துவதுடன், பல நோய்க்கிருமிகளை கால்நடைகளுக்கு பரப்புவதால் கால்நடைகளின் உற்பத்தி திறன் குறைந்து பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.
- உண்ணிகளை கட்டுப்படுத்துவதற்கு பொதுவாக பூச்சிக்கொல்லி மருந்துகளான சைபர்மெத்திரின், டெல்டா மெத்திரின், ஃபுளூமெத்திரின் மற்றும் ஐவர்மெக்டின் போன்றவை பயன்படுத்தப்படுகிறது. சைபர்மெத்திரின் , டெல்டா மெத்திரின் மருந்துகளை 1 - 2 மி.லி. 1 லிட்டர் தண்ணீருக்கு என்ற விகிதத்தில் கலந்து மாடுகளின் மேல் தெளிக்கலாம். ஆடுகளை மருந்து தண்ணீருள்ள தொட்டியில் அமிழ்த்தி எடுக்கலாம். சூரிய ஒளி நன்றாக இருக்கும் போது மருந்து தெளிக்க வேண்டும். அதே போல் மருந்து தெளிப்பதற்கு முன் கால்நடைகளுக்கு வயிறு நிறைய தண்ணீர் கொடுக்க வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல 27°செ ஆகவும் நிலவ

வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 08-18 கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- ஏதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி நெல் நடவு பணியை மேற்கொள்ளலாம். மேலும் நாற்றங்கால் வயலில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தவும். தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுபுழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசால்பான் 400 மி.லி / ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- பாக்டீரியா இலைக்கருகல் நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் இலைகளின் மேற்பரப்பில் வெள்ளை நிறக் கோடுகள் காணப்படும். நோயின் தீவரம் அதிகமாகும் போது கோடுகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 300 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 40 கிராம் / ஏக்கர் அல்லது அசாடிராக்டின் 400 மிலி/ஏக்கர் (10000 பி.பி.எம்) என்ற அளவில் தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்ககுதல் அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- வரும் நாட்களில் வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாத கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்டவும்.
- கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் போக்க போயிங் நோய் தாக்குதல் கரும்பு பயிரில் அதிகளவில் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் வளர்ச்சி குன்றி, குருத்து காய்ந்து, இலைகள் மஞ்சள் நிறமாகவும் மற்றும் கரும்புகள் வலுகுன்றியும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும். கரணைகள் கார்பன்டசிம் 50% WP ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் 30 நிமிடங்கள் நனைத்த பின், இமிடாகுளோபிரிட் 70% WS லிட்டருக்கு 1.5 மிலி என்ற அளவில் 5 நிமிடம் வரை நனைக்கவும். வயல்களின் ஓரங்களில் எறும்பின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். வரும் முன் காக்கும் முறையாக வயல் ஓரங்களில் மூன்று வரிசை வரை

இமிடாகுளோபிரிட் 17.8 SL **3.0** மில்லி / **10** லிட்டர் அல்லது குளோரன்ட்ரானிலிப்ரோல் **18.5** SC **4.0** மில்லி / **10** லிட்டர் தெளிக்க வேண்டும்.

- தொடர் மழை காரணமாக நிலக்கடலையில் தண்டழுகல் நோய் ஏற்படலாம். எனவே வயலில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தவும். நிலக்கடலை பயிரை முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயிளை மேலாண்மை செய்ய ஒரு ஏக்கருக்கு குளோரோதலோனில் **400** கிராம் என்ற அளவில் தெளிக்கலாம்.
- வரும் நாட்களில் காற்றின் வேகம் மணிக்கு **10** கிலோ மீட்டருக்கும் அதிகமாக வீசக்கூடும் என்பதால் **5** மாதமுள்ள வாழை மரங்கள் சாயாமல் இருக்க முட்டு கொடுக்க வேண்டும்.
- கத்தரி பயரில் காய்ப்புழுகள் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சியை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு **6** இனக்கவர்ச்சிப் பொறியை அமைக்கலாம்.

**கால்நடை ஆலோசனைகள்**

- வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர் வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- பசுமாடுகளுக்கு குடிக்க நீர்த்த சுண்ணாம்பு சத்துள்ள நீர் 75 மில்லி அளவு தினமும் அடர்தீவன நீர்க்கவையில் கலந்து கொடுத்து பால் உற்பத்தியை பெருக்கலாம்.
- செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க வேண்டும்.
- பன்றி பட்டிகள்களில் காற்றின் ஈரப்பதம் அதிகமான இருக்கும் போது சில சமயங்களில் அமோனியா தொகுதி பெருக வாய்ப்புள்ளது. எனவே நல்ல காற்றோட்ட வசதி செய்து தர வேண்டும்.
- முயல் கொட்டகைகளில் மழை சாரல் உட்புகாமல் இருக்க பக்கவாட்டு சுவர்களில் கோணி துணிகளை கட்டி வைக்க வேண்டும். காற்றின் ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை அதிகமாக இருக்கும் போது முயல்களில் பூஞ்சை தொற்று ஏற்பட்டு சுவாச கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.
- புறக்கடை கோழி வளர்ப்பில் கோழிகள் தேங்கி இருக்கும் மழை நீரை குடிக்காமல் பாதுகாக்க வேண்டும், ஏனெனில் இது ஒட்டுண்ணி தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.
- கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி, வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

23.07.25, 24.07.25, 25.07.25 மற்றும் 26.07.25 ஆகிய தினங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 23 - $27^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 21 - 24 $^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 80 - 90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 60 - 80 % பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 16 – 22 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- காற்றின் வேகம் மணிக்கு 16 - 22 கி.மீ அளவில் இருப்பதால் குலை தள்ளிய வாழை மரங்களுக்கு மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.

- தோட்டக்கலை பயிர்களான வாழை, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், இலவங்கப்பட்டை மற்றும் தென்னை மரங்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.
- பழவகை மரங்கள் மற்றும் மரவாசனை பயிர்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் வட்டப் பாத்திகள் அமைத்து மழை நீரை சேமிக்கவும்.
- மிளகில் வளரும் கொடிகளை தாங்கும் மரங்களுடன் கட்டிவிடவும்.
- மழை இருப்பதினால், பூச்சி கொல்லி மற்றும் களைக்கொல்லி தெளித்தல், உரமிடுதல் ஆகியவற்றை தள்ளி போடவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க. கோவை**